மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05ம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்.02/2022
உள்
அசல் வழக்கு எண்.60/2019
-------------

1. சங்கரலிங்கம்
2. சுப்பம்மாள் ... மனுதாரர்கள்/1, 4 பிரதிவாதிகள்

/எதிர்/

1. சோலைச்சாமி ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. சின்னபாலு
3. இந்திரகுமாரி
4. பாப்பா (எ) கணபதி ... 2, 3, 4 எதிர்மனுதாரர்கள்/
2, 3, 4 பிரதிவாதிகள்

இந்த மனு 27.10.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 04.11.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/1, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு மனுவுரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், வழக்கில் 1, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ரீ-ஓபன் செய்ய ஏதுவாய் மனுவை அனுமதித்து உத்தரவிடுமாறு 27.10.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). 1, 2 மனுதாரர்கள்/1, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

வழக்கில் கடந்த 12.10.2022 அன்று மனுதாரர்களது தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. 1ம் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு சென்னையிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்துள்ளார். 1ம் மனுதாரரின் மனைவி கண்ணகியும், 4ம் பிரதிவாதியும் 1ம் மனுதாரரை கவனித்துக் கொண்டு இருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. ஆதலால் மனுதாரர்களது தரப்பு சாட்சி விசாரணையானது நீதிமன்றத்தால் Close செய்யப்பட்டுவிட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாய் ஏற்பட்டதாகும். வழக்கில் மனுதாரர்கள் பக்கம் நல்ல கட்சி உள்ளது. எனவே மனுதாரர்கள் தரப்பு சாட்சி விசாரணையை ரீ-ஓபன் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாய் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு நேரிடும். எனவே, வழக்கில் மனுதாரர்களது தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்ய மனுதாரர்களது தரப்பை ரீ-ஓபன் செய்ய ஏதுவாய் மனுவை அனுமதித்து உத்தரவிடுமாறு மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-**

இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை மற்றும் கற்பனையானவை ஆகும். அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கடந்த 12.10.2022ம் தேதி மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தேதியில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரர்/1, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணையானது நீதிமன்றத்தால் Close செய்யப்பட்டுவிட்டது. அதன்பிறகும் இரண்டு, மூன்று வாய்தாக்கள் போடப்பட்டிருந்தும், ரீ-ஓபன் மனுவை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே காலதாமதம் செய்ய வேண்டுமென்றும், வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்றும் தீய எண்ணத்தில் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர்/

1ம் பிரதிவாதி உடல்நலக் குறைவினால் சென்னையிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். எந்த மருத்துவமனையில் எந்த நோய்க்காக அனுமதிக்கப்பட்டார் என்பது குறித்து மருத்துவ சான்றிதழ் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7). தீர்வு:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரரகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் வழக்கில் 1, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ரீ-ஓபன் செய்ய ஏதுவாய் மனுவை அனுமதித்து உத்தரவிடுமாறு 27.10.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களால் தங்கள் தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக் கூடும். எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் இந்த வழக்கில் ஏற்பட்டிருக்கும் கால விரையம் இதர விரையங்களை கருத்திற்கொண்டு மனுதாரர்கள் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/- ஐ செலவு தொகையாக வரும் 14.12.2022ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ

செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு வழக்கில் 1, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ரீ-ஓபன் செய்ய ஏதுவாய் மனுவை அனுமதித்து உத்தரவிடுமாறு 27.10.2022ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து மனுதாரர்கள் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/-ஐ செலவு தொகையாக வரும் 14.12.2022ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா - 14.12.2022

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்கள்/1, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்/1ம் வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.